விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 05 ஞாயிற்றுக்கிழமை (19.05.2002) தொலைபேசி 3378 ஒலி 151

## ஐ.தே.முன்னணி அரசுக்குள் பிடுங்குப்பாடு

# ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்பு திருத்த சட்டமூலம் கைவிடப்பட்டது

## கட்சித்தாவலுக்கு கடும் எதிர்ப்பு

(நமது நிருபர்)

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கவும், கட்சியின் முடிவுகளுக்குமாறாக கட்சி விட்டுக் கட்சிதாவும் எம்.பிக்களின் பதவியை பறிக்க வழிசெய்யும் தற்போதைய சட்ட ஏற்பாடுகளை முற்றாக நீக்கவும் கொண்டுவர இருந்த திருத்தசட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை என்று அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

புதிய பாராளுமன்றம் ஒன்று அமைக்கப்பட்டு ஒரு வருடம் கடந்த பின்னர் தான் விரும்பிய எந்நேரமும் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு தற்போதைய அரசமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

உத்தேச அரசமைப்பு சீர்திருத்த சட்டமூலம் இந்த அதிகாரத்தை ஜனாதிபதியிடம் இருந்து விலக்குவதாக அமையும்.

பாராளுமன்றத்தைக் கூட்டவும் கூட்டத்தொடரை ஒத்திவைக்கவும் ஜனாதிபதிக்கிருக்கும் அதிகாரத்தையும் இந்தச் சட்டமூலத்தின் மூலம் விலக்குவதற்கு வகை செய்யப்பட்டிருந்தது.

இத் திருத்த சட்டமூலங்கள் மீதான வாக்கெடுப்பின் போது கட்சியின் ஒருமித்த முடிவுகளுக்கு மாறாக உறுப்பினர்கள் தாம் விரும்பியபடி கட்சிவிட்டுகட்சி மாறி வாக்களிக்க வகை செய்யும் வழியிலும் சட்டமூலம் திருத்தம் செய்யப்படவிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் இத்தகையசட்ட மூலங்களை ஐக்கியதேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் சிறு கட்சிகள் எதிர்ககப்போவதாக தெரிவித்திருந்தன.

இதனையடுத்தே இச் சட்டமூலத்தை திட்டமிட்டபடி எதிர்வரும் 21ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் முடிவு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது (ம)

## மிருசுவில் படுகொலை விசாரணை "ட்ரயல் அட்பாரில"

### சட்டமா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

2000 ம்ஆண்டு மிருசுவில் பகுதியில் வீடுகளைப்பார்க்க சென்றவர்கள் எட்டுப்பேர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மூன்று மேல்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய 'ட்ரயல் ' அட்பார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படவுள்ளது.

ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இதற்கான உத்தரவையும் பிறப்பித்துள்ளார்.

2000ஆண்டு விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றபோது மிருசுவிலில் வீடுக்ளைப் பார்க்கச்சென்ற 9பேரில் ஒருவர் தப்பிவந்தமையும் ஒரு சிறுவன் உட்பட ஏனைய எட்டுப்பேரும் இராணுவத்தினரால் கொல்லப்பட்டதும் தெரிந்ததே (ம)

## தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள். பிரதமர் ரணிலை சந்திப்பர்

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தஉள்ளனர்.

இச் சந்திப்பின்போது தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குதல், புரிந்துணர்வு உடன்படிக்கையில் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தல் தமிழ்க் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதச் தடைச்சட்டத்தை நீக்குதல் போன்ற (08ம் பக்கம் பார்க்க)

### எதிர்வரம் 24ம் திகதிக்கு பின்னர்

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலி உறுப்பினர்கள் எவரும் வரமுடியும்

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்து எதிர்வரும் 24ம் திகதியுடன் 90 தினங்கள் நிறைவு பெறுவதால் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்து உறுப்பினர்களும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடமாட முடியும்.

எனினும் உரிய படிவங்களை பூர்த்தி செய்து பாதுகாப்பு அமைச்சிடம் வழங்கி தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கான ஆதாரங்களை அவர்கள் பெற்று வைத்திருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் குறிப்பிட்ட இராணுவப் பிரதேசங்களுக்கு செல்வதற்கான அனுமதியை மறுக்கும் அதிகாரம் படைத்தரப்பிற்கு உண்டு (08ம் பாக்கம் பார்க்க)

## நோர்வே அமைச்சர் ஹெல்கீசன்

## தமிழ் கூட்டமைப்பு எம்.பிகள் வெளிநாடுகளுக்கு பயணம்

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வெளிநாடுகளிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.

ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இந்தியாவிலும், தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் உபதலைவர் வி. ஆனந்தசங்கரி அவுஸ்ரேலியாவிலும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் எம்.பி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் லண்டனிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை சமாதானத்தை

(08ம் பக்கம் பார்க்க)

# நோர்வே அமைச்சர் ஹெல்கீசன் 22ல் பாலசிங்கத்தை சந்திப்பார்

## லண்டனில் பிரதமர் ரணிலை சந்திக்க ஏற்பாடு

(லண்டன்)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை எதிர்வரும் 22ந் திகதி புதன் கிழமை லண்டனில் சந்தித்து சமாதான முயற்சி தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாகவும், உடன்படிக்கையில் இணக்கம் காணப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் இச் சந்திப்பின் போது இருவரும் கலந்துரையாடவுள்ளனர்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கீசன் வன்னியில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரப்பாகரனுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, ஜனாதிபதி சந்திரிகா ஆகியோருடனும் சமாதான முயற்சிகள் தொடர்பாக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

(08ம் பக்கம் பார்கக)

# அரசு-புலிகள் பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி ஜூனில் நடக்கும்

## பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் உறுதி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை ஜூன் மாத நடுப்பகுதியில் திட்டமிட்டபடி நடைபெறும் என்று பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மாற்றுக்கொள்கை நிலையத்தினதும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தினதும் ஏற்பாட்டில் கொழும்பு வர்த்தக சம்மேளனக் கேட்போர் கூடத்தில் சமாதானக் கருத்தரங்கு நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமரின் ஆலோசகர் பிரடமன் வீரக்கோன் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில:

சமாதானப் பேச்சு வார்த்தைகள் இடம் பெறவேண்டும் எனில் விடுதலைப்புலிகள் மீதானதடை நீக்கப்பட வேண்டும்.

சமாதான முயற்சிகள் வெற்றி பெறும் என்ற நம்பிக்கைகள் மக்களிடம

(08ம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தான் தூதுவரை வெளியேற இந்தியா உத்தரவு

(புதுடில்லி)

இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஜஹான்கிகாசி இன்னும் ஒருவாரகாலத்துக்குள் நாட்டை விட்டு வெளியேறவேண்டும் என்று இந்திய மத்திய அரசு நேற்று உத்தரவிட்டுள்ளது.

மத்திய அரசின் இந்த உத்தரவை இந்தியாவுக்கான பாகிஸ்தானின் துணைத் தூதுவர் ஜலீல் அவாஸ் யுலஜனியிடம் வெளியுறவு இணைச் செயலாளர் அருண்கே சிங் தெரிவித்தார்.

இந்தியா மீது பாகிஸ்தான் மேற்கொண்டுவரும் பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

ஆண்டு 6-11 வரையான பாடங்கள் ஆரம்பமாகியுள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் கூடியது 15 மாணவர்கள் தனித்தனி கவனம், அனுமதிக்கு தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன், ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5062)

### WANTED

**Driver with Computer Heavy Licence Card Elderly man knows English, Sinhala, and Tamil requires stand by driving Job in Jaffna. Adv No. 251, C/o, Valampuri Jaffna.** (5319)


## இராசி பலன்

19 05 2002
வைகாசி 5 ஞாயிறு
சப்தமி மு.ப 11.44 வரை
ஆயிலியம் பி ப 2.42
ராகுகா ம் 4 22-5.52 வரை
நல்லநேரம் 8.52-10.22

**மேடம்**

கல்விச்சிறப்பு, ரோகபயம் தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**இடபம்**

காரிய அனுகூலம், கூட்டு முயற்சி, வாக்குப் பலிதம், தனவரவு.

**மிதுனம்**

கௌரவக் குறைவு, திடீர் நன்மை, கடுமையான பிரயாணம், உறவினர் சந்திப்பு.

**கடகம்**

கற்பனை மிகுதி, நண்பர்களால் உதவி, தெய்வசிந்தை நல்ல உணவு கிடைத்தல்.

**சிங்கம்**

தெளிந்த சிந்தை, பிரயாணம், தெய்வ வழிபாடு, முயற்சி கைகூடும்.

**கன்னி**

தொழில் சிந்தை, காரிய நன்மை, பெருமையடைதல், மனமகிழ்ச்சி.

**துலாம்**

கடின உழைப்பு. சுபநிகழ்வு பிறர் உதவி, கீழ்ப்படிவு.

**விருச்சிகம்**

மனச் சஞ்சலம், உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம், காரிய தாமதம்.

**தனுசு**

காரிய தாமதம், போசன சுகம், நண்பர்கள் மனஸ்தாபம், மனச்சோர்வு.

**மகரம்**

திடீர் பயணம், கௌரவம், தொழில் நன்மை, முயற்சி கைகூடும்.

**கும்பம்**

மனமகிழ்ச்சி, தொழில் விருத்தி, ஆரோக்கியம், காரியநன்மை.

**மீனம்**

வியாபார நன்மை, பிரயாணஇடையூறு, முயற்சி மந்தம், தாழ்ந்த சுபாவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

# வரணி இராணுவ முகாமை அகற்ற கோரி பிரதமர் ரணிலுக்கு மகஜர்

## தென்மராட்சி மக்கள் அனுப்பி வைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் கொடிகாமம்பருத்தித்துறை வீதியில் அமைந்திருக்கும் வரணி இராணுவ முகாமை அகற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு மகஜர் ஒன்றினை அனுப்பியுள்ளனர்.

அம்மகஜரில் இராணுவ முகாம் அப்பகுதியில் அமைந்திருப்பதால், போக்குவரத்துப் பாதை தடைப்பட்டுள்ளதுடன், நீண்டதூரம்சுற்றியே போக்குவரத்து செய்ய வேண்டியுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் குடாநாட்டில் சகஜநிலை தோன்றி வரும் இக்காலகட்டத்தில் கொடிகாமம்பருத்தித்துறை வீதியில் நடுவிலே முகாமிட்டு உள்ள இராணுவ முகாமால் மக்களின் போக்குவரத்திற்கு பெரும் சிரமங்கள் உள்ளன. இதனால் மக்களின இயல்பு வாழ்க்கை பாதிப்படைகின்றது.

எனவே மக்களின் போக்குவரத்திற்காக மேற்படி முகாமை மூடவேண்டும் எனவும் அவ்வாறு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் சாத்வீக போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை எனவும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ- 43)

# நகரில் போக்குவரத்து நெரிசலை யாழ். மாநகரசபை நீக்க வேண்டும்

## மாநகர சபை உறுப்பினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப்பகுதிகளில் வீதியோர வியாபாரிகள் மற்றும் கண்டஇடங்களில் வாகனங்கள் தரிப்பதால் பொதுமக்கள் போக்கு வரத்துக்கு, அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும், இவ் விடயத்தில் யாழ் மாநகரசபை பாராமுகமாக இருப்பதாகவும், மாநசபை உறுப்பினர். மு. தவநாதன்குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட பத்திரிகை குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

யாழ் நகரப் பகுதிகளில் பாதையோர வியாபாரிகளினால் போக்கு வரத்திற்கு அசௌகரியங்கள் ஏற்படுவதை பலதடவைகள் சுட்டிக் காட்டியும் மாநகர சபை நிர்வாகம் பாராமுகமாக நடக்கின்றது. அண்மைக் காலத்தில் வெளியூர் வியாபாரிகளின் வருகையினால் நடைபாதை வியாபாரமும் வாகனப் போக்குவரத்துக்களும் அதிகரித்துள்ள இந் நிலையில் கூட பொறுப்புணர்வோடு மாநகர நிர்வாகம் செயற்படா திருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஆஸ்பத்திரிவீதி, கே.கே. எஸ்.வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லிவீதி என்பனவற்றில் பொருட்களை ஏற்றி இறக்கும் பாரிய கொள்கலன்கள், லொறிகள், நீளம் கூடிய வாகனங்கள் தரித்து நிற்பதும் வியாபார நிலையங்களிற்கு வெளியே நடை பாதையில் பொருட்களை பரப்பி வைப்பதும், பாதசாரிகளிற்கும், வாகனப் போக்குவரத்திற்கும், பெரிதும் இடைச்சலாக உள்ளது

இவற்றைக் கட்டுப் படுத்தி மக்களின் போக்குவரத்து அசௌகரியங்களை நீக்க வேண்டும். தவறின் இவற்றால் ஏற்படும் விபத்துக்கள் பாதிப்புக்கள், அனைத்திற்கும் மாநகர முதல்வரும் ஆணையாளருமே, பொறுப்பேற்க வேண்டும். (இ)

## பாடசாலை சொந்த இடத்தில்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி டால்ரன் கல்வி நிலையத்தில் இயங்கி வந்த சாவகச்சேரி றோ.க.த.க பாடசாலை மீண்டும் அதன் சொந்த இடமான கச்சாய் வீதியில்பாடசாலைக்குஅருகே உள்ள புனித லிகோறியார் தேவாலயத்தில் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளதென்று பாடசாலை அதிபர் கே.தம்பிமுத்து அறிவித்துள்ளார். (இ)

## நிர்வாக சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்ட கிளையின் நிர்வாக சபைக் கூட்டம்நாளைதிங்கட் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் எதிர்வரும் 24 ந் திகதி மேற்கொள்ளவுள்ள அடையாள வேலை நிறுத்தம் பற்றி கலந்துரையாடவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார். (இ)

அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள்

## கஷ்டபிரதேசத்தில் அவசியம் கடமையாற்ற வேண்டும்!

(கொழும்பு)

சகல அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களும் கஷ்ட பிரதேசங்களில் கட்டாயம் கடமையாற்ற வேண்டும் என அரசாங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக் குறை நிலவி வருகின்றதாகவும், இந்நிலையில் குறிப்பிட்ட ஆசிரியர்கள்மாத்திரம்கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றி வருகின்றனர். இதனை மாற்றியமைக்கும் நோக்கிலேயே சகல ஆசிரியர்களும் கஷ்டப் பிரதேசங்களில் கட்டாயம் கடமையாற்ற லேண்டுமென்றும் இதனாலேயே அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக கல்வி அமைச்சர் கூறினார்.

இத்தீர்மானத்தின்படி ஒவ்வொரு ஆசிரியரும் கஷ்டப் பிரதேசங்களில் நான்கு வருடங்கள் கடமை புரிய வேண்டும்.

இதேவேளை இச்சேவைக் காலத்தில் ஆசிரியர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ- 5)


## அரைக்கும் ஆலைக்கான இடம் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அரைக்கும்ஆலை அமைப்பதற்கான கட்டிட வசதிகொண்ட இடம் ஒன்று பனை அபிவிருத்திச் சபைக்கு தேவைப்படுகின்றது.

இந்நிலையம் பிரதான வீதியில் அமைந்துள்ளதாகவும், களஞ்சியப்படுத்தக்கூடிய கட்டிட வசதிகள் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

நல்லூர், சுண்டுக்குளி ஆகிய பகுதிகள் விரும்பத்தக்கது. வாடகைக்கு, அல்லது குத்தகைக்கு வழங்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
**பனை அபிவிருத்திச் சபை**

பனை அபிவிருத்திச் சபை,
தலைமையகம்,
இல. 53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-4273)


## பொலிசாரின் இடமாற்றம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

நாட்டின சகல பாகங்களிலும் உள்ள பொலிசாரினதும் இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

பொலிசாரின் இடமாற்றங்களை ஒழுங்குமுறையில் இடமாற்றம் செய்யும்பொருட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் பின்னர் பொலிசாரின் இடமாற்றங்கள் குறித்த விடயங்கள் அந்த ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்படுமென்றும், அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இரும்பு குவிப்பால் பயணிகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்துசந்திப் பகுதியை அண்மித்த மானிப்பாய்வீதியின் இருமருங்கிலும் இரும்புகள் குவிக்கப்பட்டுவருவதால் அப்பகுதியால் வாகனங்கள் செல்ல இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.

தென்பகுதிக்கு ஏற்றிச்செல்லும் நோக்கோடு இரும்புகளை உழவு யந்திரம், லாண்ட் மாஸ்ரர், லொறி என்பன அவ்விடத்தில் தரித்து நின்று அதனை ஏற்றி இறக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதால் வாகனப்போக்குவரத்து மற்றும் நடைபாதைப் பிரயாணிகள், மிகவும் இடர்களுக்கு மத்தியில் அவ்வீதியால் செல்வதக் காணக்கூடியதாக உள்ளது.

இரும்புகள் அவ்விடத்தில் வைத்துக் கொள்வனவு செய்யப்படுவதுடன் நீண்டநாட்களாக ஏற்றப்படாமலும் உள்ளது, (இ-5)

## மாற்று வழியில் யாழிற்கு மின்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு மாற்று வழிகள் மூலம் மின் விநியோகத்தைப்பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 1984ம் ஆண்டு தொடக்கம் மின் உற்பத்தி நிலையம் இயங்காமல் இருந்தமையினால், இயந்திரங்கள் பழுதடைந்து காணப்படுவதாகவும், இவ் இயந்திரங்களைத் திருத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (இ-5)

## ரஞ்சித் அலுவிகார யூனில்யாழ்வருவார்

(கொழும்பு)

மாத்தளை மாவட்ட பாராமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார 1000 சைக்கிள்கள் 500 ஆட்டோக்கள் சகிதம் 3550 பேருடன் அடுத்த மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

இதன் போது சிறிமகா போதியில் இருந்து நாக விகாரைக்கு கலசம் ஒன்றும் கொண்டுவரப்படவுள்ளது.

அத்துடன் மாத்தளை முத்துமாரி அம்மன் கோயிலிலிருந்து நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு 17 அடி உயரமான திரிசூலம் ஒன்றும் எடுத்து வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

**நாட்டில்** சாத்தியமாகலாம் எனவும் மத்தியவங்கி கருதுகிறது

வடக்கு கிழக்கு மாகாணங்களை புனர்நிர்மாணம் செய்து தரைவழிப் பாதையையும் சீராக்கினால் மட்டுமே கடலுணவு உற்பத்தி விவசாயஉற்பத்தி, உள்நாட்டு வர்த்தகம், என்பன வளர்ச்சியடையும், மூன்றில் இரண்டு பங்கு கடற் பரப்பையும், மூன்றில் ஒரு நிலப் பரப்பையும் கொண்டுள்ள பகுதி அபிவிருத்தியில் இணையாமல் வளர்ச்சி சாத்தியப்படப் போவதில்லை

பத்தொன்பது வருடங்கள் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் ஒட்டு மொத்த விளைவு ஒவ்வூதியமும் இல்லாமல் போகும் நிலையே என்ற அபாய அறிவிப்புத் தான் பிரதமரின் வாயினால் வெளிவந்ததாகும் சமாதானத்தின் தேவை எந்தளவுமுக்கியமானது என்பதை சிங்கள மக்களும் நன்குபுரிந்துகொள்ளவேண்டிய நிலையே இது.

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

# தற்போதைய சமாதான முயற்சியை எதிர்ப்பவர்கள் துரோகிகளே

## சங்கைக்குரிய பலகெல்ல தேரர்

(கொழும்பு)

தற்போது அரசாங்கத்தினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளிற்கு எதிர்ப்பு தெரிவித்து வருவோர், எதிர்கால சந்ததியினருக்கும், மக்களுக்கும் துரோகம் விளைவிப்போர் ஆவார் என சங்கைக்குரிய கலாநிதி பலகெல்ல அனுதாரத்ததேரர் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகள் நாளாந்தம்வளர்ந்துகொண்டு செல்வதற்காக பாடுபட வேண்டியது நாட்டில் வாழும் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

நேற்றுமுன்தினம் கண்டியில் தேசிய வீரர் மகிந்தபண்டாவை நினைவுபடுத்தும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு, நாட்டில் நிரந்தர சமாதானம் மலர்வதற்காக பாடுபட்டுவரும் இவ்வேளையில், அவர்களுக்காக ஆசி வேண்டிப்பிரார்த்தனை செய்ய வேண்டும் எனவும்,

நாட்டுக்காக மரணித்த தேசிய வீரர்களின் தியாகம் மறைக்கப்பட்டு தற்போது சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளினால் நாட்டின் வளங்களும், சமாதான முயற்சிகளும் அழிந்து செல்கின்றன எனவும் தெரிவித்தார்.

(உ-8)

# 10 இலட்சம் செலவில் 5 வீதிகள் திருத்தம்

(மந்திகை)

பருத்தித்துறை நகரசபையினால் நகரசபை எல்லைக்குட்பட்ட 5 வீதிகள் பத்து இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுவருவதாக நகரசபை உப தலைவர் நா. மணிவண்ணன் தெரிவித்தார்.

பூதர் கோவில் வீதி, கலட்டி வீதி, 3,4 ஆம் குறுக்குத் தெரு இணைப்பு வீதி, வெளிச்ச வீட்டடி வீதி, முதலாம் கட்டை சந்தி வீதி, ஆகிய வீதிகளே திருத்த வேலைகள் நடைபெறுகின்றன

(உ-23)

பட்டு. வேலையற்ற பட்டதாரிகள்

# உண்ணாவிரதப் போரில் ஈடுபடத் தீர்மானம்

(மட்டக்களப்பு)

இருவாரங்களுக்குள் நியமனம் வழங்கப்படாவிடின், சாகும் வரையிலான உண்ணாவிரதமொன்றை ஆரம்பிக்கப் போவதாக மட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சு கடந்த ஜனவரி மாதம் பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வினை நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இருவாரங்களுக்குள் நியமனம் வழங்குவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுக்காதவிடத்து, இப்போராட்டத்தினை ஏனைய மாவட்டங்களிற்கும் விஸ்தரிக்கப் போவதாகவும் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

(உ- 8)

# சேத விபரம் சேகரிப்பு

(மந்திகை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த 20 வருடங்களாக நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது அழிவுகளுக்குள்ளான தொழில் சங்கங்களின் சமாசங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய கூட்டுறவு சங்கங்கள் என்பவற்றின் கட்டிடங்கள், தளபாடங்கள், ஏனைய சேதமான சொத்து விபரங்கள் கூட்டுறவு ஆணையாளரினால் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

(உ-23)

# வாக்களிப்பு நிலையத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

நாளை நடைபெறவுள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 275 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

16 பொலிஸ் பிரிவுகளில் நடைபெறவுள்ள இத் தேர்தல் வாக்குச் சாவடிகளில் காவல் கடமைக்காக தலா 2 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

3 மாநகரசபைகள், 4 நகர சபைகள், 10 பிரதேச சபைகள் என்பவற்றிற்கான தேர்தலே நாளை இடம்பெறவுள்ளது.

(உ)

# சாரதி அனுமதிஅட்டையை ஒரு வாரத்தில் பெறலாம்

(கண்டி)

சாரதிகளுக்கான அனுமதி அட்டைகளை ஒருவாரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மோட்டார் வாகன ஆணையாளர் ஏ. ஜினதாஸ தெரிவித்துள்ளார்.

இத் திட்டம் கண்டி, கேகாலை மாவட்டங்களில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது சாரதிகளுக்கான பரீட்சையை முடித்துக்கொண்டவர்களுக்கு தற்போது தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும், இவ்வாறான தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்களில் மோசடிகள் இடம்பெறுவதால் இனிமேல் தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

அதற்குப் பதிலாக 1 வாரத்தில் சாரதி அனுமதி அட்டையைப் பெற்றுக்கொடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் மோட்டார் வாகன ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்பவற்றை

# தனியார் மயப்படுத்துவதற்கு அஸ்கிரிய மகாநாயக்கர் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் உதவும் மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும், உலக வங்கியின் ஆலோசனைப்படி தனியார் மயப்படுத்தப்பட வேண்டியதில்லை என அஸ்கிரிய மகாநாயக்கதேரர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையின் இன்றைய பொருளாதார நிலைமையை சீர்படுத்தும்முகமாக மக்கள் வங்கியையும் இலங்கை வங்கியையும் தனியார்மயப்படுத்த அரசாங்கம் முயல்கிறது

இவ் வங்கிகள் இரண்டும் தேசத்திற்கு பெரும் சேவை யாற்றும் வங்கிகளாகும்.

இவற்றை தனியார் மயப்படுத்தவோ, இதன் வளங்களை வெளிநாடுகளுக்குவழங்கவோ வேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

(உ-3)

# வருடாந்த உற்சவம்

(மந்திகை)

நெல்லியடி தனங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெற்று வருகின்றது.

25ஆம்திகதி தேர்த் திருவிழாவும் 26ஆம்திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

(உ-23)

# சட்டவிரோத மதுபான விற்பனை

# ஆறு உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவீடு

(மந்திகை)

மதுபான விற்பனை அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமான முறையில் மதுபானம் விற்ற ஆறு மதுபான விற்பனை நிலைய உரிமையாளருக்கு தலா 500 ரூபாவீதம் குற்றப்பணம் செலுத்துமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீர்வேலி, ஆவரங்கால் புத்தூர், அச்சுவேலி பகுதிகளில் காணப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களை சுன்னாகம் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் சோதனையிட்ட போது சட்ட விரோதமாக இயங்குவது கண்டுபிடிக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது குற்றத்தை ஒப்புக்கொண்ட ஆறு உரிமையாளர்களும் மேற்படி குற்றப்பணத்தினை செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

(உ-23)

# மத்திய மாகாணத்தில் ஆயிரத்து அறுநூறு தமிழ் ஆசிரியர் வெற்றிடங்கள்

(பொகவந்தலாவை)

மத்தியமாகாணத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சுமார் ஆயிரத்து 600 ஆசிரியர் களுக்கான பற்றாக்குறை நிலவுகிறது.

இதேவேளை, பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் இருந்து பயிற்சி பெற்று வெளியேறிய நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படாமல் உள்ளது.

(உ)

# அமெரிக்காவில் விமானப் பயிற்சி பெற்ற மாணவர்கள் அல்கெய்டாவில் இணைவு

(வாஷிங்டன்)

அமெரிக்கா தாக்கப்படுவதற்கு இரண்டு மாதங்களின் முன்னர் அமெரிக்காவில் விமானப்பயிற்சிபெறும்மாணவர்களை தனது இயக்கத்தில் சேர்த்துக்கொள்ள பின்லேடன் முயற்சித்துவந்ததாக அமெரிக்க செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக 2001 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில் சந்தேகத்திற்கிடமான 8 மாணவர்களின் பெயர்களை செய்தி ஊடகங்கள் பிரசுரித்து இருந்தன.

அந்த 8 பேரில் இரண்டு பேர் ஏற்கனவே அல்கெய்டா இயக்கத்தில் பயிற்சி பெற்றவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(உ-7)

# உயர்கல்வி அமைச்சின் கீழ் தாதிமார் பயிற்சிக் கல்லூரி

(கொழும்பு)

தாதிமார் பயிற்சிக்கல்லூரிகளை உயர்கல்வி அமைச்சிடம் ஒப்படைப்பதெனதீர்மானிக்கப்பட்டுள்ளதாக தாதிமார் பயிற்சி பணிப்பாளர் திருமதி எம்.பி.அமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தாதிமார் பயிற்சிக் கல்லூரிக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும்போது, க.பொ த(சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்பதுடன், தாதிமார் பயிற்சி வகுப்புக்களை ஆங்கிலத்தில் நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தாதிமார் பயிற்சிக்கான போதனையாளர்கள் பற்றாக்குறை நிலவி வருவதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ 8)

# லைபீரியா ஜனாதிபதிக்கு மேற்காபிரிக்க நாடுகள் இறுதி எச்சரிக்கை

(அபிட்ஜான்)

லைபீரியாவில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறும் இல்லா விட்டால் லைபீரியா ஜனாதிபதி கால்ட்சைடரைபதவிகவிழ்க்க கிளர்ச்சியாளர்களை அனுப்ப நேரிடுமென்றும் மேற்காபிரிக்க நாடுகள் எச்சரித்துள்ளன.

ஐவர் கொஷிரின் தலைநகரில் நேற்று இடம் பெற்ற மேற்காபிர்க்க நாடுகளின் பொது நலவாய மாநாட்டின் போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

லைபீரிய சமாதானத்திற்கு ஐரோப்பிய மற்றும் அமெரிக்காவின் உதவிகளை நாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(உ-7)

# புனர்வாழ்வு அமைச்சு ஏற்பாட்டில் வர்த்தகத்தின் மூலம் சமாதானம்

## ஜூலை 21இல் யாழில் நடக்கும்

(கொழும்பு)

புனர்வாழ்வு- புனரமைப்பு அமைச்சுமற்றும் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் அனுசரணையுடன் தென்பகுதி வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தில் வர்த்தகசந்தை ஒன்றை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் ஜூலை மாதம் 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் வர்த்தக சந்தை நடைபெறவுள்ளது.

வர்த்தகத்தின் மூலம் சமாதானம் என்னும் தொனிப்பொருளிலேயே இவ் வர்த்தக சந்தை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ் வர்த்தக சந்தையில் தென்பகுதி உற்பத்தி நிறுவனங்கள் பங்குபற்றவுள்ளன.

(உ-3)

# இலங்கைநிலைவரத்தை நேரில்அறிய பிரிட்டிஷ் இராஜதந்திரி வருகிறார்

## இன்று வந்து 3நாட்கள் தங்கியிருப்பார்

(கொழும்பு)

பிரிட்டிஷ் உயர்மட்ட இராஜதந்திரிஒருவர் இன்று கொழும்பு வருகிறார்.

பிரிட்டனின் வெளிவிவகார பொது நலவாய அமைச்சின் ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கு பொறுப்பாகவுள்ள பணிப்பாளர் டாக்டர் றொசரின் மாஸ்டெட்டே இன்று கொழும்பு வருகிறார்.

எதிர்வரும் புதன்கிழமை வரை கொழும்பில் தங்கியிருக்கும் இவர், இங்கு நடைபெற்று வரும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான விபரங்களையும், தற்போதைய அரசியல் நிலைமைகளையும் கேட்டறிவார்.

இங்கு தங்கியிருக்கும்காலத்தில், அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளோடு இன்றைய சமாதானம் தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்றையும் நடத்துவார்.

இதேவேளை, மட்டக்களப்புமாவட்டத்தின் கிழக்கு பிரதேசத்துக்கு சென்று அங்குள்ள நிலைமைகள்குறித்தும் ஆராயவுள்ளார். (உ-8)

## வனவிலங்கு பாதுகாப்பை விஸ்தரிக்க நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வனவிலங்கு பாதுகாப்பு, தேசிய பூங்காக்களின் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கென 3ஆயிரத்து 10 மில்லியன் ரூபாவைசெலவிடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் ஆயிரத்து 235 மில்லியன் ரூபாவை நெதர்லாந்து அரசாங்கமும்பூகோள சுற்றாடல் வசதிகள்அமைப்பும் நன்கொடையாக வழங்கவுள்ளன.

இலங்கை அரசாங்கம் 635 மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளது.

மேற்படி திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஆயிரத்து 140 மில்லியன்ரூபாவை இலங்கை அரசாங்கத்திற்கு இலகு கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது. (உ-3)

## வடமராட்சி கிழக்கில் மலேரியா நோயின் தாக்கம்திடீரெனஅதிகரிப்பு

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் மீளக்குடிஅமர்ந்து வரும்மக்கள் மலேரியா காச்சலினால் பீடிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று வருடமாக மக்கள் வெளியேறி யுத்ததேசமாக காணப்பட்ட இப்பகுதிகளில் புற்கள் பற்றைகள் அடர்ந்து வளர்ந்துள்ளதால் பெருமளவான நுளம்புபெருக்கம் அதிகரித்துள்ளதுடன் கிணறுகள் மீளஇறைக்கப்படாதும் காணப்படுகின்றது. இதனால்மலேரியாவின் தாக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளிலுள்ள கிணறுகளை இறைத்து குளோறின் போட்டு மக்கள்பாவனைக்கு விடுமாறு அப்பகுதிமக்கள் அப்பகுதிக்கு சென்ற அரச அதிபர் கே.சண்முகநாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-23)

## எதிர் வரும் மாதம் தேசிய தொழில் வாய்ப்புக் கொள்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தேசிய தொழில் வாய்ப்பு கொள்கை எதிர்வரும் ஜூலை மாதத்தில் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டார நாயக்கா மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய மகாநாட்டின் போது இதனை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

தேசிய தொழில் வாய்ப்பு கொள்கை; திட்டம் தொடர்பாக அரசாங்க பிரதிநிதிகள், முதலாளிகள், தொழிற் சங்க பிரதிநிதிகளை கொண்ட முத்தரப்பு குழுவொன்று ஆராய்ந்து வருகிறதுஎனவும்,

மாவட்ட மட்டத்தில் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள், யுவதிகளிற்கு உதவும் பொருட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான சபைகளைநிறுவுவதற்கு மனிதவள நிபுணர்கள் உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-8)

## நவலோக ஆஸ்பத்திரியில் ஊடகவியலாளர்களுக்கு கழிவுத்திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

நவலோக தனியார் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் ஊடகவியலாளருக்கு இருபது சதவீத கழிவு வழங்குவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இலங்கையிலுள்ள தனியார் மருத்துவ மனைகளில் ஊடகவியலாளர்களுக்கு என இவ்வாறான கழிவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது இதுவே முதல்தடவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-3)

## திருட்டைத் தடுப்பதில் பொலிஸார் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் மையப்பகுதி மற்றும் வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் பொலிஸார் ரோந்துப் பணியை தீவிரப்படுத்தியுள்ளனர்.

அண்மைக்காலங்களில் நகரப்பகுதியில் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றதை அடுத்தே ரோந்துப்பணி அதிகரித்துள்ளது.

இதேவேளை, இரவு 10.00 மணிக்கு மேல் சந்தேகத்திற்கிடமாக நடமாடுவோர் விசாரிக்கப்படுவர் எனவும் யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-10,19)

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்ற இணக்கம்

(யாழ்ப்பாணம்)

அதிபர் சேவைப்பிரமாணங்களுக்கு அமையாது, அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டமை குறித்து கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தென்னக்கோனைச் சந்தித்த இலங்கைஆசிரியர்சங்கத்தைச் சேர்ந்தபிரதிநிதிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இனிமேல் போட்டிப் பரீட்சைகள் மூலமே தகுதி அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படவேண்டும்எனவும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

மேற்படி கோரிக்கைகளை அடுத்த ஆணைக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதுடன், அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கைஎடுப்பதாக தென்னக்கோன் உறுதியளித்தார்.

இச்சந்திப்பின் போது, தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடம் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது. (உ)

## அரியாலையில் களவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை விபுலானந்தர் வீதியைச் சேர்ந்தஎஸ்.மகேந்திரம் என்பவருடையவீட்டில் கடந்த வியாழனன்று பெறுமதிமிக்க பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

ரீவி, டெக், காஞ்சிபுரம் சேலைகள்உட்பட பல்லாயிரக் கணக்கான பெறுமதியுடைய பொருட்களே களவாடப்பட்டுள்ளன.

இத் திருட்டு தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-10)

## கருத்தரங்கு மண்டப தளபாடங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்கலாசாரமுன்னெடுப்புக்களுக்காக புதிதாக அமைக்கப்பட்ட கருத்தரங்கு மண்டபத்திற்கானதளபாடங்களை திருநெல்வேலி வட்டலயன்ஸ்கழகத்தால் வழங்கப்படும். நிகழ்வு இன்று மு.ப. 10.00மணிக்குதிருநெல்வேலி வட்டலயன்ஸ் கழகத் தலைவர் கலாநிதி க.குணராசா தலைமையில் ஆதீன கருத்தரங்குமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை திருநெல்வேலி வட்டலயன்ஸ் கழகச் செயலாளர் வ.ஸ்ரீதரனும், ஆசியுரை மற்றும் ஏற்புரையை நல்லை குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சாரிய சுவாமிகளும் நிகழ்த்தவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக பிராந்தியத் தலைவர் லயன் ஆர்.நடராசா, பிராந்திய ஒருங்கிணைப்பாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரச நூலகர் சேவை தரம் II, தரம் III, ஆகியவற்றுக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை,

கிராம சேவை அலுவலர்களை தரம் II ல்இருந்து தரம் I இற்கு உயர்த்துவதற்கான பதவி உயர்வுப் பரீட்சை என்பன ஜூன் மாதம் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ-19-10)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

முன்னாள தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் சட்டஆலோசகரான பேராசிரியர் நிக்லஸ் ஹேகனின் 'சமாதானப் பாதை நோக்கிய சந்தர்ப்பங்களை எதிர் நோக்குதலும்தாக்குப்பிடித்தலும்' எனற தலைப்பிலான கருத்தரங்கு இன்று பி.ப 3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில்நடைபெறவுள்ளது. (உ-3)

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுநர் சேவையில் அதி சிறப்பு வகுப்பிற்கான போட்டிப் பரீட்சைஎதிர்வரும் மாதம் 1,2 ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுளது. (உ-19,10)

## சுற்றுநிருபம் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

2002 கலவியாண்டுக்கான தமிழ்த்தினப் போட்டி விதிமுறைகள் அடங்கிய சுற்றுநிருபம் கல்வி அமைச்சினால் மாகாணக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய அனைத்து பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களையும் போட்டிக்கு மாணவர்களை தயார்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுளளது. (உ-19,10)

## யாழ். பல்கலையில் உடற்கல்வித்துறை அசைவுக்கல்வி 5 தினங்கள்

(வல்வெட்டித்துறை)

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறையின் அனுசரணையுடன் உடற் கல்வித்துறை மாணவர்களுக்கும் விரிவுரைகளுக்கும் 'அசைவுக்கல்வி' என்னும் பயிற்சிப் பட்டறை நாளைதொடக்கம் வெள்ளிக்கிழமைவரை காலை 8.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில்நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறைஆசிய விளையாட்டில் சாதனை படைத்தவரான என் எதிர் வீரசிங்கம் அவர்களால் நடத்தப்படவுள்ளது.(உ-217,3)

## ஹொக்கி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஹொக்கி அணி மீளவும் தெரிவுசெய்யப்பட்டு ஹொக்கிப் பயிற்சி யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இதற்கான அடுத்த பயிற்சி நாளை பி.ப. 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திட்டமிடற் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான முதல் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள், ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்கு முன் பரீட்சைஆணையாளர், பொலவத்தை, பத்தரமுல்லை என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

● ● ●

மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2002 / 2003 ஆம்கல்வியாண்டில்அரசாங்க, அரசாங்க அங்கீகாரம் பெற்ற மற்றும் தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களை இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் (உ-3)

## நிதியுதவி

(சண்டிலிப்பாய்)

சங்கானை பிரதேசசெயலர் பிரிவிலுள்ள சிக்கனக் கடனுதவிச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு, சித்தன்கேணி போரூட் அமைப்பினால் வீடு, கிணறு, மலசலகூட அமைப்பு என்பவற்றுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. (உ-255)

## இடைநிலைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் வங்கிப் பாடங்களின் இடை நிலைப்பரீட்சை எதிர் வரும் ஜூன் மாதம் 2,8 ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலையில் இடம்பெறவுள்ளது. (உ-19,10)

## மாதாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும்29 ஆம்திகதி காலை 9.30மணிக்கு யாழ்.மாநகர முதல்வர் எஸ்.கந்தையன் தலைமையில் இந்து விடுதியில் இடம்பெறவுளளது. (உ-19)

## விசேடகல்வி ஆசிரியர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

விசேட கல்வி ஆசிரியர் பயிற்சி நெறிக்கு தமிழ்மொழி மூல விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளையடுத்தே மேற்படி பயிற்சி நெறி முதல் தடவையாக தமிழில் ஆரம்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ)

## இன்று ஒரு தகவல்

### நரகத்திலிருந்து சுவர்க்கத்துக்கு

விதேஹ தேசத்து ராஜனை எமனுடைய தூதுவர்கள் சுவர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார்கள். போகும் வழியில் நரகத்தில பலர் கஷ்டப்பட்டுக் கொண்டு, ஊறவி கோரிக் கதறிக் கொண்டும் இருப்பதைப் பார்த்தான் அரசன்.

இதைப் பார்த்த அரசனுக்கு அவர்களிடம் அனுதாபம் ஏற்பட்டது. உடனே தன்னை அழைத்துச் செல்லும் தூதர்களைப் பார்த்து, 'சுவர்க்கத்துக்கு வருவதை விட நான் இங்கேயே இருக்க விரும்புகிறேன். இங்கே எத்தனையோ ஏழை ஆத்மாக்கள் சித்திரவதை செய்யப்படும் போது, நான் அங்கேவர விரும்பவில்லை. அதனால் என்னை இங்கேயேவிட்டுவிட்டுச் செல்லுங்கள் என்றான்.

தூதுவர்களும் சரியென்று ஒப்புக்கொண்டு போய்விட்டார்கள. எமனிடம் இந்த விசயத்தைக் கூறினார்கள். உடனே எமன் நரகத்துக்கு வந்து அரசனைப் பார்த்து, அரசனே உன்னிடம் எண்ணிறந்த நற்குணங்கள் அமைந்துள்ளன. அதனால்தான், உன்னைச் சுவர்க்கத்துக்கு அழைத்துச் செல்ல நானே நேரில் வந்திருக்கிறேன்; உனக்கு இந்த இடம் ஏற்றதல்ல, அதனால் என்னோடு சுவர்க்கத்துக்கு புறப்படு என்றான்.

அதற்கு அரசன், என் அரசர்கள் இங்கே கஷ்டப்படும் போது நான் மட்டும் சுவர்க்கத்துக்கு வந்து சந்தோசம் அனுபவிக்க விரும்புவது சுயநலமாகும். என் நற்குணங்களால் ஏதேனும் பிரயோசனம் இருக்குமானால், அவை என் சகோதரர்களைச் சேரட்டும் நான் இங்கேயே துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறேன்' என்றான்.

அரசன் இதைக் கூறிமுடிக்கு முன்பே, எமன் மறைந்து விட்டான். நரகம் சுவர்க்கமாக மாறி விட்டது. நரகவாசிகள் யாவரும் தேவர்களாக மாறிவிட்டார்கள்.

நல்லூர் கோபிநாத்

## பதவியைத் தக்கவைப்பதற்காகவே
# அரச எதிர்ப்புப் போராட்டங்களை மகிந்த ராஜபக்ஷ நடத்துகிறாராம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தனது பதவியை பாதுகாத்துக் கொள்வதற்காகவே அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களை நடத்த முயல்கிறார் என நீதியமைச்சர் லொக்கு பண்டார குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுஜன ஐக்கிய முன்னணி நாடுதழுவிய ரீதியில்போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளமை குறித்தேநீதியமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளையும் பொருளாதாரக் கொள்கைகளையும் கண்டு பொறுக்க முடியாமலேஎதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர் என்றும் கூறியுள்ளார்.

நாட்டில் அமைதியை ஏற்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கபெருமுயற்சிஎடுத்து வருகிறார்.

இதனைக் குழப்பவேஎதிர்க்கட்சிகள் முயல்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## பல்கலை வலையமைப்பு குறித்த கலந்துரையாடல்

(கொழும்பு)

பல்கலைக்கழக வலையமைப்பையும், உயர் கல்வித் துறையையும் பாதிக்கும் விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று நாளை நடைபெறவுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பல்கலைக்கழகங்களின் மறுசீரமைப்பு தொடர்பாகவும் நாளையதினம் விரிவாக ஆராயப்படும் என தெரியவருகிறது. (உ-8)

### உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி. ப. 4. 30 மணிக்கு அல்வாய் நண்பர்கள் வி. க எதிர் கொற்றாவத்தை சிவானந்தா வி. க.ஆகியன மோதவுள்ளன. (உ-3)

## வலி. வடக்கு மக்களின் விபரங்கள் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து வாழும் வலிகாமம் வடக்கு மக்களின் விபரங்கள் மற்றும், அப்பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் விபரங்கள் என்பவற்றை திரட்ட வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கரன படிவம் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் ஊடாக விநியோகிக்கப் படுவதாகவும், அவற்றைப் பெற்றுப் பூர்த்தி செய்து இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறும் வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக் கழகத் தலைவர் சு. பரமநாதன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, இம்மாத இறுதியில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்ற வலி வடக்கு பிரச்சினைகள் தொடர்பான மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காகவே இவ் விபரங்கள் திரட்டப்படுவதாக தெரியவருகிறது. (உ)

## வலி வடக்கில் விவசாயிகள் சங்கம் அமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

விளை நிலங்கள் வீடுவாசல்களை விட்டுப்பிரிந்து போக்கிடமின்றி ஏக்கமுடன் வாழும் வலி வடக்கு விவசாயிகளின உள்ளக் குமுறல்களை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில், விவசாயிகள் சங்கம் ஒன்றினை உருவாக்க வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை பி ப 3 மணிக்கு வலி வடக்கு விவசாயிகள், அனைவரையும் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் அருகாமையில் ஒன்றுகூடுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (உ)

## உயர் மட்ட கூட்டத்திற்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மக்களின் பிரச்சினைகள்தொடர்பாக ஆராய இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர், அரசாங்க அதிபர், கல்விப் பணிப்பாளர், விவசாயப் பணிப்பாளர், மீன்பிடித் துறைப் பணிப்பாளர், சுகாதார வைத்திய அத்தியட்சகர்கள் முதலான திணைக்களத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வலி வடக்கின பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், முப்படை அதிகாரிகள், பிரதேசத் தலைவர்கள் கொண்ட மாநாடொன்றை வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் தலைமையில் கூட்டப்பட வேண்டுமென வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக்கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. (உ)

## நிகழ்கால அரசியல்
# விழிப்பு கூட்டங்களில் கிராமிய மக்கள் நாட்டம்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் கிராமிய மட்டத்தில் நிகழ்கால அரசியல் நிலைப்பாடு குறித்த விழிப்புணர்வுக் கூட்டங்களும் படக்காட்சிகளும் பரவலாக நடைபெற்று வருகின்றன.

கிராம மக்கள் விடுத்துவரும் கோரிக்கைகளை அடுத்து தொடர்ச்சியாக வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் விழிப்புக் கூட்டங்கள நடத்தப்பட்டு வருவதாக வடமராட்சிஅரசியல்துறைகோட்ட பொறுப்பாளர் தயாதெரிவித்துள்ளார்.

பெருமளவான மக்கள் திரண்டு சென்று இந் நிகழ்வுகளில் கலந்து கொள்வதையும் அவதானிக்க முடிகின்றது. (உ-23)

## சமாதான புகையிரத யாத்திரை நாளை ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை தோற்றுவிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி தெற்கிலிருந்துவடக்குநோக்கி சமாதான புகையிரதயாத்திரையை நாளை நடத்து தெற்கு நீலன் திருச்செல்வம நம்பிக்கை நிதியம் முடிவு செய்துள்ளது.

கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்தில் காலை 9.00மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இவ் வெள்ளோட்டவைபவத்தில் அமைச்சர்களும் இலங்கைக்கான வெளிநாடுகளின் தூதுவர்களும் சமாதானத்திற்காக உழைக்கும் அமைப்புகளின் பிரதிநிதிகளும்கலந்து கொள்ளவுள்ளனர்.

கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையுடன் இணைந்து நடத்தப்படும் இவ் யாத்திரைக்கு இலங்கை புகையிரத சேவைகள் துறையினர் முழுஆதரவுவழங்கவுள்ளனர். (உ-3)

## பசு மாடுகளைதுன் புறுத்திய
# நான்கு நபர்களிடம் குற்றப்பணம் அறவீடு

(மந்திகை)

4 பசு மாடுகளை அற்றின் கால்களைக் கட்டி, துன்புறுத்தும்வகையில் ஒரு லான்ட்மாஸ்ரரில் எடுத்துச் சென்ற நால்வரை தலா 500 ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த புதனன்று மாலை வன்னியில் இருந்து வளர்ப்பதற்காக வாங்கிய மாடுகளை இவ்வாறு பரிதாபத்திற்குரிய நிலையில் கொண்டுவருவதை அவதானித்த கொடிகாமம் பொலிஸார் சம்பந்தப்பட்ட 4 நபர்களையும் கைதுசெய்து மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

கால்நடைகளை சித்திரவதைக்குள்ளாக்கிய சட்டத்தின் கீழ், தலா 500ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிபதி அவர்களை எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார். (உ-23)

## எதிர்க்கட்சியை
# பொறுமை காக்குமாறு இம்புள்தெனிய கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் வர்த்தக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வரும் இவ்வேளையில், மீண்டும் அதனை சீர் கெடாது பாதுகாப்பது எதிர்க்கட்சியின் பொறுப்பாகும் எனவர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சந்திரா இம்புள்தெனிய தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும் தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினாலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதை தொடர்ந்து, வர்த்தக நடவடிக்கைகள் யாவும் விரிவடைந்து வருகின்றன.

நாட்டின் பிரதான கட்சியாக விளங்கும் எதிர்க்கட்சி தனிப்பட்ட ரீதியாக, அரசியல் இலாபம் கருதாது அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் குறைபாடுகள் இருப்பின் அதனை சுட்டிக் காட்டி, அரசைசரியான திசையில் நடக்க வழிகாட்ட வேண்டும்.

இவ்வேளையில், எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டங்களையும், எதிர்ப்புக்கூட்டங்களையும் நடத்திவருவதனால் இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்திருக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடுகள் சீர் குலைந்துவிடும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## பயங்கரவாதம் பற்றிய
# சார்க் பிரகடனத்தில் புதிய அம்சங்கள்

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராகசர்வதேசமட்டத்தில் கொண்டுவரப்பட்ட மாற்றங்களுக்கு இணையாக, சார்க் பிரகடனத்தில் மேலும் பலபுதிய அம்சங்களை சேர்ப்பதுபற்றிஆராயவேண்டியதருணம் இதுவென்று அவ்வமைப்பின் அங்கத்துவ நாடுகளின் சட்டஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர்.

சார்க் அமைப்பின் சட்ட ஆலோசகர்களின் கூட்டம் கலாநிதி றொகான் பெரேரா தலைமையில் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

சார்க் பிரகடனத்தில் கொண்டுவரப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பாக உள்ளூர் சட்டங்களில் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்கள் பற்றியும் அங்கு ஆராயப்பட்டதுடன்,

இது தொடர்பானவிடயத்தில் சார்க் செயலகம் உதவி புரியும் என சட்ட ஆலோசகர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (உ-8)

## சிந்தனைக்கு விருந்து

### தூங்காது முயல்தலே

வடக்கினது மூலவளங் கொண்டிங் கேற்றம்
மக்களுக் காகவெனத் தொடங்கப் பட்ட
இடங்களாம் காங்கேசன் துறைப ரந்தன்
இன்றழிவுப் பாழ்களாய் இருக்கக் கண்டோம்
திடமுடனே மீண்டுசீ மேந்தி னோடு
நிகழிரா சயனப்பொரு ளுற்பத் திக்குத்
தொடங்குவ தெந்நா ளென்றே எண்ணித்
தூங்காது முயலுதலே மேன்மை யாகும்.

- பழையவன்

## பாப்பரசரின் 82 வது பிறந்த நாள் நேற்று

(ரோம)

கத்தோலிக்க திருச்சபையின் தற்போதைய பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பரின் 82 வது பிறந்ததினம் நேற்று கொண்டாடப்பட்டது.

திருச்சபையின் தலைமைப் பீடமான வத்திக்கானில் இடம் பெற்ற பிறந்த நாள் வைபவத்தில் பேராயர்கள் பலர் கலந்து கொண்டதுடன் பாப்பரசருக்கான வழிபாடுகளும் இடம் பெற்றன.

பலநாடுகளிலுமிருந்துசகோதரகிறிஸ்தவ தலைவர்கள் தமது வாழ்த்து செய்திகளை அனுப்பியுள்ளனர்.

இதேவேளை பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் கத்தோலிக்க திருச்சபையின் 247 வது பாப்பரசர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-7)

## பிரபாகரனிடம்

வேறுவிதமாகவும் தனது கட்சி உறுப்பினர்களுக்கு பிறிதொரு விதமாகவும் கருத்துக்களைக் கூறிவரும் ஜனாதிபதி சந்திரிகாவுடன் சேர்ந்து எம்மால் பணியாற்ற முடியாது என்றே எனது தனிப்பட்ட கருத்தை நான் கூறுவேன்.

அவருடைய தந்தை நாட்டின் கட்டமைப்பை உருக்குலைதார் தாயார் பொருளாதாரத்தை அழித்தார். சந்திரிகா குமாரதுங்க இந்த இரண்டையும் செய்கிறார். எனவே நாம் எப்படி அவருடன் பணியாற்றுவது?

கேள்வி:

நீங்கள் அண்மையில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்தபோது அரசாங்க பேலதிக செயலாளர் றிச்சேர்ட் அமிற்ரேச்சை சந்தித்துள்ளீர்கள். அமெரிக்க அரசாங்கம் இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சி பற்றி என்ன கருதுகிறது விடுதலைப் புலிகளின் தடையை நீக்குவது சம்பந்தமான எண்ணம் ஏதாவது அமெரிக்காவிடம் உள்ளதா?

பதில்:

கைத்தொழில் அமைச்சர் ஜீ.எல் பீரிஸ், ஐ.தே. கட்சியின் தவிசாளர் மாலிக் சமரவிக்ரம ஆகியோருடன் முழுமையான ஒரு விஜயத்தை அமெரிக்காவிற்கு மேற்கொண்டேன். ஒருவிடயம் மிகத் தெளிவாகத் தெரிந்தது. அதாவது ஸ்ரீலங்காவிற்காக அமெரிக்கா அனுதாபப் படுகிறது. சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா உதவும் என்று எமக்குத்தெரிவிக்கப் பட்டது. இது எமக்கு, மிகவும் மகிழ்ச்சி அளித்தது. எமது உள் நாட்டு விடயங்களை தமது நலன்களுக்காக பயன படுத்தப் போவதில்லைஎன்று அவர்கள் கூறினார்கள். அத்தோடு பயங்கரவாதத்திற்கு இந்த உலகில் எத்தகைய இடமும் இல்லை என்பதையும் வலியுறுத்திக் கூறினார்கள். இது நல்ல விடயம். ஏனெனில் இனிமேல் ஒளிப்பதற்கு இடமில்லை என்பதை இது காட்டுகின்றது.

விடுதலைப் புலிகளின் தடை நீக்கம் பற்றி நான் பதில் கூறும் நிலையில் இல்லை. இவ்விடயம் பற்றி நாம் அங்கு எம்மிடையே கலந்துரையாடவில்லை.

கேள்வி:

உள்ளூராட்சி தேர்தலில் உங்களது கட்சி பாதாள உலகக் குண்டர்களை நிறுத்தப் போவதாக எமக்குச் செய்திகள் கிடைத்துள்ளன.

பதில்:

இத்தகைய சக்திகளை எமது கட்சியில் நிச்சயமாக நாம் வைத்திருக்கவில்லை. இப்படியான அபத்தங்களுக்கு நிச்சயமாக எமது கட்சியில் இடமில்லை. இந்த அபத்தங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சகித்துக் கொள்ளவே மாட்டார். ●

# நாட்டில் போருக்கு ஓய்வு வந்தாலும் பொருளாதார ஓலத்திற்கு முடிவு இல்லை

நாட்டின் சேமலாப நிதி ஊழியர் நம்பிக்கை நிதி, ஓய்வூதியம் என்பவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் எல்லாம் கரைந்துவிட்டன. ஒருசில வருடங்களில் அவற்றை உரியவர்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்படலாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூறியிருந்தார்.

ஓய்வூதியர்களுக்கும் மற்றும் தனியார் துறையில் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கும் அவர்களுக்கென ஒதுக்கிவைக்கப்பட்டதொகை மாயமாய் மறைந்து விட்டதென்றும், அவர்கள் தமது சொந்த முயற்சிகளின் படியே வாழ்வதற்கான ஒழுங்குகளை செய்துகொள்ள வேண்டும் என்றும் அரசாங்கமே கூறுவது போல் இது இருக்கிறது.

### மருந்துப் பொருளின் விலை உயர்வு

இத்தகைய ஒரு நிலை மிகவும் பயங்கரமானது. அதாவது ஓய்வூதியர்கள் சிறு வருமானத்துடன் வாழ்க்கை நடத்தவேண்டியுள்ளதுடன், உடல்நலம் குறைந்த வயதில் மருத்துவச் செலவுகளுக்கு பெரும் செலவு செய்ய வேண்டியவர்களாயுள்ளனர். மருந்து வகைகளின் விலை உயர்வையும் தாங்கவேண்டும். இவர்களுக்கென விசேட சலுகைமுறை திட்டங்களுமில்லை. தேசிய சுகாதாரசாப்புறுதியுமில்லை. இவர்கள் போக்குவரத்துப் பிரச்சினைகளாலும் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் வாழ்பவர்களுக்கு பிரதமரின் கூற்று புண்ணில் புளி வார்த்தது போலிருக்கும். இன்னும் ஒரு சில வருடங்களின் பின்னர் மென்மேலும் உடல், உளப் பலவீனம் ஏற்படும்வேளை ஓய்வூதியமும், சேமலாப நிதியும் கிடையாத ஒரு சூழல் பற்றி அவர்கள் பெரிதும் கவலைப்படுவர்.

அரசாங்கத்துடன் வைத்துக்கொள்ளும் கொடுக்கல் வாங்கலில் மிகப்பெரும் உத்தரவாதம் தமக்குண்டென மக்கள் நம்புகின்றனர். தமது சேவைக்காலம் முழுவதிலும் தமது சம்பளத்தில் ஒரு பகுதியை சேமலாப நிதிக்காக ஒதுக்கியவர்களும் பிற்காலத்திற்கு ஓய்வூதியம் கிடைக்கும் என்பதால் அரசாங்க சேவையை விடாப்பிடியாக பற்றிக்கொண்டு நின்றவர்களும், பெரும் மனக்கலக்கத்திற்குள்ளாவர். சற்று அதிக சம்பளத்துடன் கிடைக்கும் தனியார்துறை வேலைவாய்ப்பை நாடாமல் குறைந்த சம்பளத்துடனும் சிறு சிறு சலுகைகளுடனும் சேவைக்காலத்தை முடித்தவர்களுக்கு, முற்று முழுதாக நம்பியிருந்த அரசே அப்பட்டமான ஏமாற்றைச் செய்தால் எப்படியிருக்கும்?

**யூகி**

### நாட்டின் நிதிநிலை

மறுபுறம், நாட்டின்நிதிநிலை சுதந்திரத்திற்குப் பின் முதன் முறையாக பாதாளத்திற்குச் சென்றிருப்பது முக்கிய விடயமாகும். பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன அபாய அறிவிப்பு செய்துள்ளார். வெளிநாட்டுக் கடன்களுக்காக கொடுக்கவேண்டிய வட்டி 110 பில்லியன் ரூபாவென்றும், ஊழியர் சம்பளம் 100 பில்லியன் என்றும் ஓய்வூதியக் கொடுப்பனவு 32 பில்லியன் என்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்றுக்கொண்ட கடனுக்காக இவ்வாண்டில் திருப்பிச் செலுத்தவேண்டிய தவணைப்பணம் 1430 பில்லியன் என்றும், ஆனால் நாட்டின் மொத்த வருமானம் ரூபா 275 பில்லியன் மட்டுமே எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஓய்வூதியத்தையும், சேமலாப நிதியையும் மட்டுமல்ல, அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களையே கொடுக்கமுடியாத நிலையே ஏற்படுமல்லவா? அமைச்சர்கள், எம். பிக்களின் சம்பளங்களை மட்டுமே பெற்றுக்கொண்டு பணியாற்றும்படி கேட்கப் பட்டுள்ளது போன்று, வேறு பிரிவினரும் பணிக்கப்படலாமோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு சில்லி நாட்டின் மக்கள் தமது பானை, சட்டிகள் சமையற் பாத்திரங்களை வீதிகளில் கட்டித் தொங்கவிட்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதை நினைவூட்டும் நிகழ்வுகள் இங்கும் நடைபெற நாளாகாது. ஏற்கனவே வாழ்க்கைச் செலவு அதிகரிப்பையும் கண்டிக்கும் எதிர்ப்புக் கூட்டம் மே 16ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் நுகேகொடையில் நடத்தப் பட்டுள்ளது நாம் எரிமலையின் விளிம்பில் குந்திக் கொண்டிருக்கும் நிலையே தெரிகிறது.

### சமூகப் பாதுகாப்பு

அரசாங்கத்தின் சமூகப்பாதுகாப்பு விடயத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு குறைபாடும் மக்களை முற்றிலும் குழப்பிவிடக்கூடியது. பங்குச் சந்தைகள், தனியார் நிறுவனங்கள் வங்குரோத்து நிலையை அடைவதை சாதாரணமாக காண்கின்றோம். தனியார் நிதிநிறுவனங்கள் கூட வங்கிரோத்தை அடைந்துள்ளன. சிறுகச்சிறுகச் சேமித்த பணத்தை பிற்கால வாழ்க்கைக்கு உத்தரவாதம் எனக் கருதி சாதாரண மக்கள் வைப்பிலிட்ட பின் நிதிநிறுவனங்களே முறிவடைந்த வரலாறும் உண்டு. தமிழர்கள் அடகு வைத்த தங்க நகைகளை ''பாதுகாப்பு'' காரணம் காட்டி அரச வங்கியொன்றே இழுத்தடிப்புச் செய்து வந்தது. மக்கள் போராட்டங்களை நடத்தியே தமது நகைகளை பெறவேண்டியிருந்தது.

ஆனால் பொதுநிதி அரசாங்கத்தினாலும், அரச நிறுவனங்களாலும் பாதுகாக்கப்படுவது. நாட்டின் பெரும்பகுதி மக்களின் நல்வாழ்வுக்கு இந் நிதிகளின் பாதுகாப்பு அவசியமானது. இதில் ஏற்படக்கூடிய ஏதேனுமொரு வங்குரோத்தினால் மக்கள் பெருமளவில் குழம்புவர். எனவேதான் சமூகப் பாதுகாப்புக்கான நிதிகளில் அரசியல்வாதிகளின் தலையீடோ, தனியார்துறையினரின் தலையீடோ சிறிதளவும் அனுமதிக்கப்படுவதில்லை. எவரேனும் ஒரு அரசியல்வாதி சமூகப் பாதுகாப்பு நிதியில் முறைகேடாக நடப்பது போல் தெரிந்தாலும் அது முழுமக்களின் கவனத்திற்குமுரிய பெரிய பிரச்சினையாகி விடுகின்றது.

கடந்த தேர்தல் காலத்தில் சர்ச்சைக்குரியவராகவிருந்த எஸ் பி. திசாநாயக்கா சமுர்த்தி நிதிகளில் குளறுபடி செய்தார் என்ற கதை அவிழ்த்துவிடப்பட்ட போது, அதுமக்களின்கவனத்தைபெருவாக ஈர்த்தது. அவ்வாறு மோசடியெதுவும் நடந்து விடவில்லை என்று பலமான பிரசாரத்தினால் நம்ப வைக்கப் பட்டபின்னரேமக்கள் அமைதியடைந்தனர். அது அரசியல் பூச்சாண்டி என அறிந்ததும் அவர்கள் திசாநாயக்காவுக்கு அமோக வெற்றியையும் தந்தனர்.

### உளவியல் அச்சம்

இப்பொழுது பிரதமர் கூறியிருந்த கதையும், மக்களை உளவியல் ரீதியாக அச்சப்படுத்தி சமாதானத் திட்டத்திற்கு ஆதரவளிக்க வைக்கும் முயற்சியெனவும் போரானது ஒவ்வொருவரின் வீட்டினுள்ளும் நுழைந்து அவரவர் வருமானத்தை கொள்ளையடிக்கும் நிலைக்கு வந்து விட்டது என்று மக்களை சிந்திக்க வைக்கவும் கூறப்பட்ட கதையென இதைப் புறந்தள்ளி விடமுடியாது, இந்த வங்குரோத்து நிலை உண்மைதான் என்பதை புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன

மத்திய வங்கியின் அறிக்கையின் படி இந்த முதற் காலாண்டில் தேயிலை உற்பத்தி 9 வீத வீழ்ச்சி, கைத்தொழில்துறையில் முன்னேற்றம் இல்லை. கடலுணவு உற்பத்தியில் நீண்ட காலமாகவே மூன்றில் ஒரு பங்கு உற்பத்தி வீழ்ச்சி 2000 ஆம ஆண்டில் 1.8 வீதமிருந்த விவசாயம் உற்பத்தி நிலையிலும் முன்னேற்ற மில்லை சுற்றுலாத்துறையிலும் ஆடை ஏற்றுமதி துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது,

இந் நிலையில் இவ்வாண்டிற்குரிய பொருளாதார வளர்ச்சி, 3.7வீதம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது சண்டையை நிறுத்தினால் மட்டும் போதாது. நிரந்தர சமாதானம் ஏற்பட்டாலேயே இதுவும் கூட

(2-ம் பக்கம் பார்க்க)

# பாக்-இந்திய எல்லைப் பதற்றத்தை தணிக்கும் முயற்சியில் அமெரிக்கா

(புதுடில்லி)

இந்தியபாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பாரியயுத்தம் வெடிக்கும் அபாய நிலை தோன்றியுள்ளதால் பதற்றத்தை தணிக்கும் முகமாக அமெரிக்க இராஜாங்க பிரதி அமைச்சர் றிச்சர்ட் அமிர்ட்டை அப்பகுதிகளுக்கு அனுப்பிவைக்கவுள்ளதாக அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காஷ்மீர் எல்லைப் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சமரை அடுத்து இருதரப்பிலும்சுமார் 10 ஆயிரம்படைத்துருப்புகள் எல்லைப் பகுதிகளில்குவிக்கப் பட்டுள்ளனர்.

இதனால் இருநாடுகளுக்குமிடையில் பாரிய யுத்தமொன்றைஎதிர்பார்ப்பதாகவும் அதனை தடுக்கவே றிச்சர்ட் அமிர்ட்டை அனுப்பி வைக்கவுள்ளதாக புஷ் தெரிவித்துள்ளார்.

(உ-7)

# அந்நியர் பிடியில் 450 ஆண்டுகள் ஆட்பட்ட கிழக்கு தீமோரின் சுதந்திர தினம் இன்று

**450 வருடகால கிழக்குத் தீமோரின் அடிமை வாழ்வுக்கு விடிவு கிடைத்துள்ளது.**

**அதன் முதலாவது சுதந்திர தினம் இன்றாகும்**

(தீமோர்)

சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரம் பிரஜைகளை கொண்ட கிழக்கு தீமோர் முதலாவது சுதந்திரதினத்தை இன்று கொண்டாடுகிறது.

450 வருடமாக அந்நியர்களின் ஆட்சியின் பிடியிலிருந்து கிழக்கு தீமோர் விடுதலையடைந்துள்ளது.

இந்தோனேசியா அமெரிக்காவின்ஆதரவுடன், போர்த்துக்கேய குடியேற்ற பிரதேசமான கிழக்குதீமோரை 1975 ஆம் ஆண்டு கைப்பற்றியது. இந்தோனேசியாவில் அப்பாதைய ஆட்சிப்பீடத்திலிருந்த ஜனாதிபதி சுஹாப்பா பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் கிழக்கு தீமோரின் சுதந்திரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்கு செய்த கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பிற்கு இந்தோனேசியா இணங்கியது.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற இக்கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் 60 சத வீதமான மக்கள் ஆதரித்து வாக்களித்திருந்தனர்.

இந்தோனேசியா கிழக்கு தீமோரை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த போது சுமார் 2 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்.

உலகின் 192 வது சுதந்திர நாடாக இன்று முதல் இந் நாடு பிரகடனம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(உ-8,7)

நாடொறும் நாடி
முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.

குறள்

# வலம்புரி

## போர் மூட்டம்

அண்டை நாடுகளான இந்தியாவும் பாகிஸ்தானும் போருக்கான தயார்நிலையில் உள்ளன. அமைதியாக இருக்க வேண்டிய இந்துமா கடல் பிராந்தியத்தில் தனகல் சேட்டையில் பாகிஸ்தான் இடை இடையே இந்தியாவோடு சீண்டுவது வழமையாகிவிட்டது. கார்கிலில் தேவையில்லாமல் இந்தியாவோடு சீண்டிய பாகிஸ்தான் தாராளமாக வாங்கிக்கட்டியதோடு இந்திய தேசத்தின் ஒற்றுமையையும் மேலும் ஒருபடி இறுக்கமடையச் செய்தது.

இந்தியாவிலிருந்து பிரிந்து சென்ற பாகிஸ்தானுக்கு யுத்தத்தில் அளவு கடந்த பிரியம். ஆரம்பத்தில் வங்களாதேசத்துடன் சீண்டிய பாகிஸ்தான் இந்தியா கொடுத்த தர்ம அடியோடு திருந்தியிருக்க வேண்டும்- விட்டபாடில்லை. பயங்கரவாத அமைப்புக்களின் இருப்பிடமாக இருந்து கொண்டு பாரத பூமிக்கு சதா தொந்தரவு கொடுக்கும் பணியை செய்து வருகிறது.


தனக்குள் ஓர் ஜனநாயகத்தைப் பேண முடியாத பாகிஸ்தான் அடிக்கடி இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகி உலகில் 'உறண்டல்தனம்' மலிந்த முதலாவது நாடு பாகிஸ்தான் என்ற தகுதியைப் பெற்றுக்கொண்டுள்ளது

அபிவிருத்தி நிலையில் பின்தங்கியிருந்த போதிலும் அணு ஆயுத உற்பத்தியிலும் யுத்த ஆயத்தங்களிலுமே நாட்டை ஈடுபடுதத்தி வருவதைக் காண முடிகிறது. இதனால் பாகிஸ்தான் மக்களும் கூட நிம்மதியாக வாழ முடியாதுள்ளது.

அமெரிக்காவின் வாலைப்பிடித்துக்கொண்டிருந்த பாகிஸ்தான் ஒஸாமா பின்லேடனுக்கும் உதவி செய்ததன் மூலம் அமெரிக்காவின் ஆத்திரத்திற்கு ஆளாகியுள்ளது.

முன்னர் இந்தியாவுடனான பாகிஸ்தானின் முண்டலுக்கு அமெரிக்காவின் ஆதரவு இருந்ததெனினும் தற்போதைய சூழ்நிலையில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆதரவு வழங்கத் தயாரில்லை.

இந்நிலையில் பாகிஸ்தான் தேவையில்லாமல் காஷ்மீரில் கைவைத்து இந்தியப் படைகளிடம் அடிவேண்டுவது இந்துமா சமுத்திரத்தில் தேவையற்ற பதற்றத்திற்குக் காரணமாக அமையும்.



# பரிசுத்த ஆவியின் வருகையினால் புதுப் பொலிவுடன் என்றும் திகழ்வோம்

## பரமபிதா காட்டியபாதை

பூட்டப்பட்டிருந்த கதவுகளும் மூடப்பட்டிருந்த பாதைகளும் திறக்கப்பட்ட போது- மக்கள் எல்லோரின்மனதிலும் ஒரு நிம்மதிப் பெருமூச்சு, அக்களிப்பும், குதூகலமும், ஆரவாரமும், எதிர்பார்ப்புகளும் நிறைந்து காணப்படுகின்றது. புதிய விடியலுக்கான உறவுப் பாலங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இழந்த உறவைப் புதுப்பிப்பதிலே மக்கள் மகிழ்வடைகின்றார்கள். இதற்கெல்லாம் காரணம், கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றமையே ஆகும். இயேசு மரித்து உயிர்த்து விண்ணகம்செல்லுமுன் தய்சீடருக்கு தூய ஆவியானவரின் வருகையினால் நீங்கள் புதுப்பிறப்படைந்து உலகெங்கும் என் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்று மொழிந்தருளினார்.

**ஆவியானவரின் வருகையில்**

யூதர்களுக்கு அஞ்சி வாழ்ந்த இயேசுவின் சீடர்கள் ஆவியானவர் அவர்கள் மேல் வந்து இறங்கிய பின்னர் புதுப்பெலனடைந்தார்கள், துணிவு கொண்டார்கள், இயேசுவின் வாக்குறுதியை நிறைவேற்ற உடனேயே புறப்பட்டுச் சென்றார்கள். 'தூயஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத்தொடங்கினர்' (திரு.பணி 2:4) 'தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறுஎவரும் 'இயேசு ஆண்டவர்' எனச் சொல்ல முடியாது' என்று போதித்தனர்.

**அதிகாரங்கள் வழங்கப்படுவது**

மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுவது பொது நன்மைக்காகவே. சுய கௌரவத்துக்காக அதனைப் பயன்படுத்துவது தவறானதாகும். அவ்வாறு பயன் படுத்தும் போது நன்மையிலும் பார்க்க தீமை விளைவதே அதிகமாகும். நீதி எதுவோ, கண்ணியமானது எதுவோ, எதுவெல்லாம் நற்பண்புள்ளதோ. எதுபுகழ்ச்சிக்குரியதோ அவற்றை நிலை நாட்டவும், வளர்க்கவும் அதிகாரத்தைப் பயன் படுத்தும் போது, அதன் பயன் அளப்பரியதாகும். இவ்வாறே ஆவியின் வரங்கள் அளிக்கப்பட்டிருப்பதும் பொது நன்மைக்கே. எவனொருவன் தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்துகின்றானோ அவனை சாத்தான் தன்மயமாக்கிவிடுவான்.

**திருச்சபையின் பிறப்பு**

தூயஆவியானவரின்வருகையுடனே திருச்சபை பிறந்தது. பொது நன்மைக்காகப் பாடுபடும்அச்சபையார்இயேசுவின் வார்த்தைகளைச் சிரமேற்கொண்டு செயற்பட சக்தி பெற்றார்கள். இயேசு சீடர்களுக்குத் தோன்றியபோது, கூறிய அருள் மொழிகளே திருச்சபையின் நற்செய்திப் பணியாக உள்ளது. எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். 'எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா' என்றார். (யோ 20:23) தன்னுடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பு அதிகாரத்தைச் சீடருக்கு அளித்தார் இயேசு. அதனையேதிருச்சபையின் திரு ஆட்சியாளர் செய்து வருகின்றனர். அவர்களும் சுய நலந்துறந்து பொது நன்மைக்காகவே இவற்றைச் செய்ய வேண்டியவராவர்.

காலங்கள் கொடுக்கப்படுவதும், சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதும் நன்மைகள் பெருகுவதற்கே. நன்மைகள் உருவில் வரும் தீய விளைவுகள் களையப்பட வேண்டும். கலாசாரம், பண்பாடுகள் பாதுகாக்கப்பட நாம் ஒவ்வொருவரும் விழிப்புள்ளவர்களாக மாற வேண்டும். மகிழ்ச்சியின் ஆரவாரங்கள் எம்மைத் தீமையில் ஆழ்த்திவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இறைபயமுள்ள, நாட்டு பற்றும் ஒற்றுமையும் எங்கள் வாழ்வு நல்வாழ்வாக வளம் பெற வழி சமைக்கும்.

**அன்ரனி பீற்றர்**

# பிரபாகரனிடம் நாட்டை கொடுக்க விரும்பியவர் இன்று சமாதான முயற்சியை எதிர்க்கிறார்

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணநாயக்கா சண்டே லீடருக்கு வழங்கிய பேட்டி.

(நேற்றைய தொடர்ச்சி)

**கேள்வி:**

பொ.ஐ முன்னணியில் பலம் மிக்கவர்களான முன்னாள் பிரதமர் ரத்னசிறீ விக்ரமநாயக்கா, முன்னாள் சபாநாயகர் அநுராபண்டார நாயக்கா ஆகியோர் மேற்படி எதிர்ப்பணியினருடன் சேர்ந்ததன் மூலம் சமாதான எதிர்ப்பு முயற்சி ஒரு புதுவடிவம் பெற்றுள்ளது. இத்தகைய சிரேஷ்ட அரசியல் வாதிகள் சமாதான எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்ததன் மூலம் ஐ.தே.மு. அரசியல் தளம்பல் நிலை ஏற்படுமா? முன்னாள் சபாநாயகரும், முன்னாள பிரதமரும் அதில் கலந்து கொள்வது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:**

222 சபைகளுக்காக நடத்தப்பட்ட கடந்த உள்ளூராட்சி தேர்தலின் போது எமது ஐ.தே.க. 217 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. ஐ.தே.க. ஆட்சிக்கு வந்ததும் ஊழல்கள் அம்பலப்படுத்தப்பட்டன. பொருளாதாரம் சரியான பாதைக்கு கொண்டு வரப்பட்டது, வேலையில்லாதிருக்கும் இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும் என்பதுபற்றி நாம் உறுதியளித்துள்ளோம்.

எமக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றம் என்னவென்றால் நாம் ஒழுங்கான முறையில் யுத்தநிறுத்த உடன்பாட்டில் பிரவேசிக்க வில்லை என்பதாகும். அப்படி இல்லை என்பதை நாம் நிரூபித்துள்ளோம், நிரூபிக்க முடியாத இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக மக்கள் பதிலளித்துள்ளார்கள்.

> எமக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றம் என்னவென்றால் நாம் ஒழுங்கான முறையில் யுத்த நிறுத்த உடன்பாட்டில் பிரவேசிக்க வில்லை என்பதாகும். அப்படிஇல்லை என்பதை நாம் நிரூபித்துள்ளோம். நிரூபிக்க முடியாத இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக மக்கள் பதிலளித்துள்ளார்கள்:

எனவே நாம் எதிராக நிற்கத்தயாராகவே உள்ளோம். முன்னாள் பிரதமரிடமிருந்தோ முன்னாள் சபாநாயகரிடம் இருந்தோ எதிர்ப்பு வரலாம். எதற்கும் நாம் முகம் கொடுக்கத் தயார்.

அநுரா பண்டார நாயக்கா எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்தது பற்றிக் கூறவேண்டுமானால் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ((S.L.F, P. (Sri Lanka Family Party) ஸ்ரீலங்கா குடும்பக்கட்சியாக நினைக்கிறார். அவர் ஜனாதிபதி வேட்பாளராக நிற்கப் போவதில் எமக்கு அக்கறை இல்லை. அவருக்கு உறுதியான, நிலையான கொள்கை இல்லை. அவர் தனது சகோதரியைப் போல் இன்றைக்கு ஒன்றைச் சொல்வார் நாளைக்கு வேறொன்றைச் சொல்வார்.

**கேள்வி:**

அரசாங்கமும் எதிர்க்கட்சியும் தேசிய ஒருமைப் பாடுள்ள ஓர் அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆர்வமாக உள்ளன. ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு எதிராக கடுமையான கருத்தைக் கொண்டவராக உள்ளார். முன்னாள் பிரதமர் முன்னாள் சபாநாயகர் ஆகியோரின் நிலைப்பாடும் அவ்வாறே உள்ளது. இந்நிலையில் தேசிய ஒருமைப்பாடுள்ள ஓர் அரசாங்கம் சாத்தியமாகும் என்று கருதுகிறீர்களா?

**பதில்:**

தேசிய ஒருமைப்பாடுள்ள அரசாங்கம் எமக்கு ஒரு சஞ்சீவி என்றே நான் சொல்வேன். இதையும் பைத்தியக்

**தமிழில்: கபிலர்**

காரத்தனமான சிந்தனையும், முரண்பாடான சிந்தனையும் உள்ளவர்களோடு சேர்ந்து தான் நிறைவேற்ற வேண்டியுள்ளது. வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு ஒருவிதமாகவும், உள்நாட்டுப்பத்திரிகைகளுக்கு இன்னொரு விதமாகவும, மகாநாயக்கர்களுக்கு

(6ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### தான்

தன்னை அறியாது சகந் தானாய் இருந்துவிட்டால்
உன்னை அறிய அருள் உண்டோ பராபரமே.

-தாயுமானவர்

உனக்குரிய பொருளொன்று என்னையறிந்து உனக்கு என்னைக் கொடுத்துவிட்டால் உன்னை நான் அடையலாமே.

தான் தேடும் பெருநிலையை மனிதன் தன்னிடத்துக் காணாவிடில் அதை வேறு எங்கு காண்பான்? தன்னில் தானாயிருக்க அஞ்சுபவனுக்கு அயலார் எங்ஙனம் ஆறுதல் அளிப்பர்? அடைக்கலம் புகத் தன்னிடத்து ஒன்றையும் காணாதவன் வேறு எங்கும் நிலைத்த நிம்மதியைப் பெறமாட்டான். புறத்தில் உள்ள யாவும் அழியும் தன்மையன. அகத்தில் இருப்பது ஆத்மா. தன்னில் நிறைவு காணலாம். தேடும் அனைத்தையும் தன்னில் பெறலாம். தனக்கு நித்திய வாசஸ்தானம தானே.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# சமாதானத்தை வலியுறுத்தி மோட்டார் சைக்கிள் பவனி

## அடுத்த மாதம் யாழ் வரும்

மாத்தளையில் இருந்து நூறு மோட்டார் சைக்கிள்கள் கலந்த கொள ளும் சமாதானப் பவனி ஒன்று அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வரவுள்ளது.

மாத்தளைப் பாராளுமன்ற உறு ப்பினர் ரஞ்சித் அலுவிகாரை தலை மையில் இந்த மோட்டார் சைக்கிள் சமாதான யாத்திரை வரவுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந் திருந்த ரஞ்சித் அலுவிகாரை இது தொடர்பான அனுமதியை வன்னியில் விடுதலைப்புலிகளின் பிரமுகர் புலி த்தேவனைச். சந்தித்து பெற்றிருந் தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமாதான யாத்திரையை நடத்த வுள்ள எம்.பி. ரஞ்சித் அலுவிகாரை அமைச்சர் அலுவிகாரையின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### நோர்வே...

22ந்திகதி புதன்கிழமை லண்ட னில் அன்ரன் பாலசிங்கத்தை சந் திக்கும் ஹெல்கீசன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் லண் டன் செல்லும் குழுவினரையும் சந் தித்துப் பேசவுள்ளார்.

நோர்வே் பிரதி வெளிவிவகார அமைச்சரும் விடுதலைப் புலிகளின் ஆலோசகரும் அடுத்த வாரம் லண் டனில் சந்தித்துப் பேசுவர் என்று நேற்றைய வலம்புரியின் தலைப்புச் செய்தியாக வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

### தமிழ்க்கூட்டமைப்பு..

பல தரப்பட்ட விடயங்கள் இப் பேச்சு வார்தைகளின் போது ஆராயப்பட வுள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகள் மீதான தடையை அடுத்து வரும் இரண்டு வாரங்களில் நீக்குவதற்கு அரசு திர்மானித்திருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் கப்பு கொட்டுவ தெரிவித்துள்ளமை குறி ப்பிடத்தக்கது. (ம)

### 22வது ஆண்டு நிறைவு விழா இன்று

யாழ்ப்பாணம் மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்க இயக்கத்தின் 22வது ஆண்டு நிறைவு விழா இன்று கொண்டாடப்படவுள்ளது. இன்று காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் மாலை 4.30 மணியளவில் புனித ஞானப்பிர காசியார் மண்டபத்தில் நிறைவு விழா நிகழ்வுகளும் நடைபெறும். (ந)

### தமிழ்..

வலியுறுத்தி பாராளுமன்றத்துக்கு வெளியே வெகுஜன அமைப்புப் போராட்டங்களை முன்னெடுக்க நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று விடு தலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தமிழ்க் கூட்டமைப்பினரை அண்மை யில் கேட்டுக் கொண்ட போதும் அது தொடர்பான எந்தவிதமான நடவடிக் கைகளையும் கூட்டமைப்பு எம்பிக்கள் இதுவரை மேற்கொள்ளாமை குறித்து தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது. (ம)


# காஷ்மீர் எல்லைப் பகுதியில் இந்தியா – பாகிஸ்தான் மோதல்

(புதுடில்லி)

காஷ்மீர் எல்லைப் பகுதியில் இந்திய பாகிஸ்தான் படைகள் கடும் சமரில் ஈடுபட்டு வருவதாக அங்கி ருந்து வரும் செய்திகள் தெரிவிக்கி ன்றன.

இரு நாட்டுப் படைகளும் பெரும் மோதலில் ஈடுபட்டுள்ளதால் காஷ் மீர், ஜம்மு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயரத் தொட ங்கியுள்ளதாகவும் பெருமளவிலான மக்கள் அவ் விடங்களை விட்டு வெளியேறிவிட்டதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை எல்லைப் பிரச்சினை திவிரமடைந்து பாரிய யுத்தமாக மாறி நிலைமை மோசமடைவதை கட்டுப்படுத்தும் வகையில் அமெரி க்கா இரு நாடுகளுடனும் பேசி பதற்றத்தை குறைக்கும் முயற்சியை எடுத்து வருவதாக அமெரிக்க வெளி யுறவு செய்தித் தொடர்பாளர் றிச்சேட் பௌச்சர் தெரிவித்துள்ளார். (இ)




| இந்தியா | |
|---|---|
| சனத்தொகை - | 10295மில்லியன் |
| **இந்தியாவின் இராணுவ பலம்** | |
| **தரைப்படை** | |
| இராணுவவீரர்கள் - | 1100,000 |
| டாங்கிகள் - | 3414 |
| கவசவாகனம் - | 1857 |
| பீரங்கிகள் - | 4456 |
| ஏவுகணைகள் (பிரித்வி,அக்கினி)- | 120 |
| **கடற்படை** | |
| நீர்மூழ்கிகள் - | 16 |
| யுத்தக்கப்பல்கள் - | 27 |
| **விமானப்படை** | |
| யுத்தவிமானம் - | 775 |
| ஆயுதம்தாங்கியஹெலிகள்- | 94 |

| பாகிஸ்தான் | |
|---|---|
| சனத்தொகை | -1618மில்லியன் |
| **பாகிஸ்தானின இராணுவ பலம்** | |
| **தரைப்படை** | |
| இராணுவவீரர்கள் - | 550,000 |
| டாங்கிகள் - | 2300 |
| கவசவாகனம் - | 1150 |
| பீரங்கிகள் - | 1752 |
| ஏவுகணைகள் - | 122 |
| **கடற்படை** | |
| நீர்மூழ்கிகள் - | 10 |
| யுத்தக்கப்பல்கள் - | 08 |
| **விமானப்படை** | |
| யுத்தவிமானம் - | 358 |
| ஆயுதம்தாங்கியஹெலிகள்- | 29 |

ஆதாரம்:- இராணுவ சமநிலை 2001/2002 த ஹெரி டேஜ் பவுண்டேஷன

### சமாதானத்தை வலியுறுத்தி புகையிரத பவனி

(கொழும்பு)

சமாதானத்ததை வலியுறுத்தி இன்று கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி புகையிரத சமாதானப் பவனி வரவுள்ளது.

இப் புகையிரதத்தில் சமாதான த்தின் அவசியத்தை வலியுறுத்தும் சுலோகங்கள் வாசகங்கள் எழுதப் பட்டு வெள்ளைக் கொடிகளை பறக்கவிட்டவாறு வவுனியாவுக்கு சமாதானப் புகையிரதம் வருமென் றும் இன்று மாலையே புகைவண்டி கொழும்புக்கு திரும்பிச் சென்று விடுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### அச்சுவேலிகுடும்பங்களுக்கு றோட்டரிக்கழகம் உதவும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், நல்லூர் றோட்டரிக் கழகங்கள் இணைந்து அச்சுவேலி யில் வசிக்கும்ஒரு தொகுதி வறிய குடும்பங்களிற்கு கல்வி உபகரண ங்கள், மற்றும் கால்நடைகளை இன்று வழங்கவுள்ளது.

அச்சுவேலி ஜே285 கிராம உத்தி யோகத்தர் ரி.யோகராஜாவின் அலு வலகத்தில் முற்பகல் 11 மணிக்கு இவை வழங்கப்பட இருப்பதால் இத னைப் பெற்றுக்கொள்ள தெரிவு செய் யப்பட்ட குடும்ப அங்கத்தவர்களை தவறாது வருகை தருமாறு றோட்ட ரிக் கழகத்தினர் கேட்டுள்ளனர்.(இ)

### அருட்தந்தை தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆயர் இல்லத்தைச் சேர்ந்த அருட்தந்தை எம்.ஈ. பயஸ் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு காயம் அடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-10-19)

### இராணுவக்...

என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலு க்கு வந்து 30 தினங்களின் பின்னர் 50 புலி உறுப்பினர்களும் இரண்டு மாத முடிவில் 100 புலி உறுப்பினர் களும் இராணுவத்தின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு சென்று அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டுவ ருவது குறிப்பிடத்தக்கது. (ந-5)

### அரசு...

ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்தில் சமாதான முயற்சிகள் இதயசுத்தி யுடன் மேற்கொள்ளப்படாததாலேயே தோல்வியில் முடிவடைந்தன.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா சமாதானத்தை வென்றெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார் என்றும் அவர் மேலும் கூறினார்.(இ)


## தகவல் தொழில்நுட்பப் பூங்கா

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

T.P: 021-3641 e-mail: itp@sltnet.lk

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்கா தனது ஓராண்டுப் பூர்த்தியின் பின் பல புதிய கற்கைநெறிகளையும், பயிற்சிநெறிகளையும் ஆரம்பித்துள்ளது. விண்ணப்பதாரர்கள் காலம் தாழ்த்தாது பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:22-05-2002

**Certificate Courses:** 2months including practicals

* Word *Excel * Access
* AutoCAD * PageMaker * CorelDraw

700/-

**Certificate Courses:** 3 months including practicals

* VisualBasic * Java * Hardware
* Internet & E-Mail * C++ * Webpage Development

1500/-

**Diploma Courses:** 5 months including practicals

| | |
|---|---|
| * Dip in Ms-Office | 2800/- |
| * Dip in Desktop Publishing | 2400/- |
| * Dip in Computer Hardware Technology | 3200/- |
| * Dip in Software Development Technology | 4750/- |
| * Dip in Information & Communication Technology | 4750/- |

**Online Courses**

கணனி மூலமான நேரடிப்பயிற்சி

Dip in PC Applications & Office Management

*Duration -2months* 2000/-

*Workshop Practical*

* Internet Browsing Technique
* PC Hardware Maintenance
* Webpage Designing

*Duration 1month* 1000/-

சகல கற்நைநெறிகளுக்கும் பதிவுக்கட்டணம் ரூபா 250 மட்டுமே.

Diploma கற்கைநெறி தவிர்ந்த ஏனைய கற்கை நெறிகளுக்கு பதிவுக்கட்டணத்துடன் பயிற்சிக் கட்டணமும் செலுத்தி அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பு

* வெகுவிரைவில் சிறுவர்களுக்கான முற்றிலும் மறுசீரமைக்கப் பட்ட நவீன தொழில்நுட்பத்துடனான பயிற்சிநெறி ஆரம்பிக்கப் படவிருக்கின்றது.
* நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்கைநெறிகளுக்கான சான்றிதழ்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இணையச் சேவை: காலை 8 மணிதொடக்கம் மாலை 8மணிவரை தடங்கலின்றி வழங்கும் ஒரே நிறுவனம். சேவையினை மேலும் விரிவுபடுத்த சகல முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

சகல கற்கைநெறிகளும் காலை–மாலை, வார–வார இறுதி நாட்களில் நடைபெறும்.

தகவல்: பணிப்பாளர்

(C/4273)






மில்க்வைற்




25 மொடேன் மில்க்வைற் மேலுறைகளை சேகரித்து ஓர் அப்பியாசக் கொப்பியை பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்

527, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 3541

லாலா

சோப் சண்சயின் சோப்

எமது வன்னி மண்ணிலும் மீண்டும் விற்பனைக்கு வரவிருக்கின்றது.

லாலா அச்சுவேலி


## நெஞ்சை விட்டகலா ஓராண்டு . . .!

பிறப்பு 11 09 1984



இறப்பு 29 05 2001

**செல்வி .இலங்கைநாயகம் துஷ்யந்தி (துர்க்கா)**

(உயிரியல்பிரிவு மாணவி, திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி)

திதி: சப்தமி. (19.05.2002)

தெல்லிநகர் பதியினிலே
தெய்வமாக வந்துதித்தவளே!
துர்க்கையின் வரம் வேண்டி
"துர்க்கா" என உனை நாம் அழைத்தோம்!
துர்க்கையின் நாளாம் செவ்வாயினிலே தோன்றி
துயரத்தை சுமக்கவைத்தாய் ஒரு செவ்வாயினிலே!
'குஞ்சு எடி குஞ்சு' என உனை நாமழைக்க
குற்றமேதுமில்லாமல் எங்கேயம்மா சென்றிட்டாய்?

இன்று எமது செல்வத்தின் ஓராண்டு நினைவு தினத்தில் ஆத்மா சாந்தி பெற தெல்லியூர் துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கிறோம்.

26, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை. T.P 026- 22397

பிரிவினால் வாடும்: அப்பா, அம்மா, அம்மம்மா, அண்ணன்மார், அண்ணிமார்

(5325)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.